## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | அணிந்துரை | iii |
| | முகவுரை | iv |
| 1. | முன்னுரை | 1 |
| 2. | வரலாற்று உருவாக்கத்தில் கல்வெட்டுக்களின் பங்கு | 6 |
| 3. | கல்வெட்டுக்கள் எழுதும் முறை | 35 |
| 4. | இந்தியக் கல்வெட்டுக்களில் காணும் மொழிகள் | 43 |
| 5. | கல்வெட்டுக்களின் தன்மை | 60 |
| 6. | அசோகர் கல்வெட்டுக்கள் | 75 |
| 7. | தமிழகக் கல்வெட்டுக்களின் பொதுத்தன்மை | 88 |
| 8. | இந்தியக் கல்வெட்டாய்வின் வரலாறு | 100 |
| 9. | தென்னிந்திய கல்வெட்டாய்வின் தோற்றமும் வளர்ச்சியும் | 115 |
| 10. | கல்வெட்டுக்களில் காலக்கணிப்பு | 121 |
| 11. | எழுத்துக்களின் தோற்றம் | 136 |
| 12. | சிந்துவெளி எழுத்துக்கள் | 145 |
| 13. | பிராமி | 156 |
| 14. | கரோஷ்டி | 169 |
| 15. | குறியீடுகள் | 174 |
| 16. | தமிழ் பிராமி | 188 |
| 17. | வட்டெழுத்து | 206 |
| 18. | கிரந்த எழுத்து | 212 |
| 19. | தமிழ் எழுத்துக்கள் | 218 |
| | நோக்கீட்டு நூல்கள் | 222 |
| | சொல்லடைவு | 245 |

# இயல் 2

# வரலாற்று உருவாக்கத்தில் கல்வெட்டுக்களின் பங்கு

இந்திய வரலாற்றை உருவாக்கம் செய்ய கல்வெட்டு மிகச் சிறந்த முதன்மைச் சான்றாக விளங்குகிறது. வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், இலக்கியங்கள், சமய நூல்கள், நாணயங்கள், தொல்லியல் சான்றுகள் போன்றவை இவற்றில் பெரும் பங்காற்றிய போதிலும் கல்வெட்டுத் தரவுகள் சில இலக்கியங்களின் காலத்தை முடிவு செய்யவும், அரசுகளின் மரபுரிமையை நிலைநாட்டவும் பெரிதும் பயன்படுகின்றன. இந்தியாவில் கிடைத்த கல்வெட்டுக்கள் பெரும்பான்மையானவை கொடைக் கல்வெட்டுக்களாகக் கோயில்களில் காணப்பட்ட போதிலும் இக் கொடைக் கல்வெட்டுக்களின் ஊடாக கிடைக்கின்ற வரலாற்றுச் செய்திகளை நாம் ஒதுக்கிவிட முடியாது. பொதுவாக இலக்கியங்கள் காலந்தோறும் பெயர்த்து எழுதப்படுவதாலும், இடம்விட்டு இடம் நகரக்கூடியத் தன்மை பெற்றிருப்பதாலும், சமூக மேல்தட்டு மொழியைக் கொண்டு விளங்குவதாலும் சில நேரங்களில் இலக்கியங்களைவிடச் சமகால வரலாற்றுச் செய்திகளைத் தாங்கி நிற்கின்ற கல்வெட்டுக்கள் ஒரு சிறந்த வரலாற்றுச் சான்றுகளாகத் திகழ்கின்றன. கல்வெட்டுக்கள் நிலையானவையாகவும், இடம் மாறாதவையாகவும், சாதாரண மக்கள் பேசுகின்ற மொழியில் அமைந்தவையாகவும் இருப்பதால் இதன் வரலாற்று முக்கியத்துவம் மேலும் கூடுகிறது. கல்வெட்டுக்கள் அரசனின் புகழ்பாடுபவையாக அவனது செயல்களை எடுத்தியம்புவையாக மட்டுமே இருந்தபோதிலும் வட்டார அளவிலான சமகாலக் கல்வெட்டுக்களை ஒருங்கிணைத்துப் பார்க்கும்பொழுது அதன் முக்கியத்துவம் நன்கு விளங்கும். கல்வெட்டுக்கள் யாரால், எதற்கு, என்ன நோக்கத்திற்காகப் பொறிக்கப்பட்டன என்பதை மனதில் நிறுத்தி புள்ளியியல், தர்க்கரீதியிலான அடிப்படையில் அதில் காணும் வரலாற்று நிகழ்வுகளைக் கல்வெட்டாய்வாளர் கையாண்டால் மட்டுமே இதை ஒரு மிசச் சிறந்த வரலாற்றுச் சான்றாகப் பயன்படுத்திக் கொள்ள இயலும். சில நேரங்களில் இலக்கியங்களில் காணப்படாத செய்திகள் கல்வெட்டுக்கள் மூலம் பெறப்படுவதை காணலாம். எடுத்துக்காட்டாக, சங்க இலக்கியங்கள் சமண சமய தொடர்பான செய்திகளைப் பெரும்பாலும் தாங்கி நிற்கவில்லை எனலாம். ஆனால் கி.மு. நான்காம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் சமணம்

தழைத்தோங்கியிருந்தது என்பதை கணிசமான தமிழ்-பிராமி கல்வெட்டுக்கள் நமக்கு உணர்த்துகின்றன. அதேபோல் செங்கம் பகுதியில் கிடைத்த நடுகற்கள் அங்கு நிலவிய அக்காலச் சமூகச் சூழலை நமக்கு எடுத்துரைக்கின்றன. இவற்றிற்கு எல்லாம் மேலாக காலந்தோறும் ஒரு மொழியின் எழுத்து வரிவடிவங்களில் ஏற்பட்ட மாற்றத்தைக் கல்வெட்டு மூலம் மட்டுமே திறம்பட எடுத்துரைக்க முடியும். எனவே கல்வெட்டுக்கள் மூலம் பெறப்படும் பல்வேறு தரவுகள் ஒரு நாட்டின் வரலாற்றுத் தொன்மையை நிரல்பட உய்த்துணர வகை செய்கின்றன.

## அரச மரபுத் தரவுகள்

இந்தியாவில் தொடர்ந்து பன்னெடுங்காலமாக முடியாட்சி இருந்ததால் இந்திய வரலாறு என்பது அரசமரபு வரலாறு என்னும் அளவிற்குத்தாக்கம் ஏற்பட்டுவிட்டது. ஒரு நாட்டின் சமூக வரலாறு என்பது மிக முக்கியம் என்ற போதிலும் அரசுரிமை வரலாற்றை அறிந்திருக்க வேண்டும் என்பது தவிர்க்க இயலாது போயிற்று. இலக்கியம், நாணயம் மற்றும் கல்வெட்டு ஆகியவற்றில் காணப் படும் செய்திகளை ஒருங்கிணைத்துப் பார்த்தால் மட்டுமே இவ் வரசுரிமையை வரிசைப்படுத்த இயலும். பொதுவாக கல்வெட்டுக் களில் தரப்பட்டுள்ள அரசமரபுத் தரவுகள் ஆட்சிபுரியும் மன்னனின் மரபைச் சார்ந்தவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தந்தைக்குப்பின் மகன் தொடர்ந்து ஆட்சிக்கு வந்தால் மட்டுமே இம்மரபுப் பெயர்கள் தொடர்ச்சியாக இருக்கும். சில நேரங்களில் ஆட்சிபுரியும் மன்னனுக்குப் பிறகு அவரது சகோதரர் ஆட்சிக்கு வந்தால் ஆட்சிக்கு வந்த சகோதரர் மரபு கல்வெட்டில் இடம்பிடிக்கத் தொடங்கும். எனவே கல்வெட்டில் காணப்படுவது ஆட்சிபுரியும் மன்னது குலமரபுப் பட்டியல் (genealogical list) என எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர இவருக்கு முன்பு ஆட்சிபுரிந்த மன்னர்களது பட்டியல் (king - list) என எடுத்துக் கொள்ளக்கூடாது (Goyal 1967:306). எடுத்துக்காட்டாக, குப்தரின் காலத்தில் ஆட்சிபுரிந்த ஒரு சிறந்த மன்னன் ஸ்கந்த குப்தர் என்பது அவனது கல்வெட்டு மூலம் அறியலாம். ஆனால் ஸ்கந்த குப்தருக்குபின் ஆட்சிக்கு வந்த ஆட்சி யாளர்களின் கல்வெட்டுக்களில் இவரது பெயர் காணப்படவில்லை. இதற்குக் காரணம் இவருக்குப்பின் இவரது மகன் ஆட்சிக்கு வராது சகோதரரது மகன் ஆட்சிக்கு வந்ததே காரணம் ஆகும். எனவே அரியணை தந்தைக்கு அடுத்து மகனுக்கு எனத் தொடர்ச்சியாக சென்றால் மட்டுமே மரபுப்பெயர்கள் தொடர்ச்சியாக காணப்படும்.

## இயல் 3

# கல்வெட்டுக்கள் எழுதும் முறை

இந்தியாவில் கிடைக்கும் பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுக்களில் தனிமனித ஆவணங்கள், வணிகக்குழு ஆவணங்கள், அரசு ஆவணங்கள், சமய ஆவணங்கள் என சமூகத்தின் அங்கமாக விளங்கிய பலதரப்பட்ட மக்களாலும் நிறுவனங்களாலும் அளிக்கப்பட்ட ஆவணங்கள் கோயில்கள், கற்தூண்கள், கற்படுக்கைகள் போன்றவற்றில் பொறிக்கப்பட்டுள்ளன. சில கல்வெட்டுக்கள் மிகச் சிரத்தையுடன் வெட்டப்பட்டு இருக்க சில கல்வெட்டுக்கள் எவ்வித ஈடுபாடுமின்றி வெட்டப்பட்டுள்ளன. இருப்பினும் அரசரின் நேரடி மேற்பார்வையின் கீழ் வெட்டப்பட்ட அரசு ஆவணங்கள் அல்லது சமயத்தோடு நேரடித் தொடர்பு கொண்ட கல்வெட்டுக்கள் பெரும்பாலும் நேர்த்தியாக வெட்டப்பட்டுள்ளன. சான்றாக முதலாம் இராஜராஜனின் தஞ்சாவூர் பெரிய கோயில் கல்வெட்டைக் குறிப்பிடலாம். தொடக்ககாலக் கல்வெட்டுக்கள் குறிப்பாக அசோகர் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் நன்கு உருவாக்கப்பட்ட தளத்தின் மீது வெட்டப்படவில்லை. இதேபோன்று பெரும்பான்மையான தமிழ்-பிராமி கல்வெட்டுக்கள் மற்றும் பூலாங்குறிச்சி கல்வெட்டைக் குறிப்பிடலாம். ஆதலால் இதைப் படித்துணர்ந்து கொள்வதில் பல சிக்கல்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. பிற்காலக் கல்வெட்டுக்கள் நன்கு உருவாக்கப்பட்ட சமதளத்தின்மீது வெட்டப்பட்டுள்ளன.

நன்கு உருவாக்கப்பட்ட தளத்தின் மீது செதுக்கப்பட வேண்டிய கல்வெட்டின் வாசகம் ஒருவகை மை அல்லது செங்காவி கொண்டு முதலில் எழுதப்படும். இப்படி கல்வெட்டின் வாசகத்தை எழுதுபவருக்கு லிபிகாரா (lipikara), லேக்க (lekha), கரண (karana), கரணிக (karanika), காயஸ்தா (kayastha) என்று பெயர். அசோகரின் பிரம்மகிரி கல்வெட்டில் லிபிகாரனின் பெயர் சபடா (Capada) என்று காணப்படுகிறது (CII I:175-178). சாஞ்சி ஸ்தூபியின் நுழைவு வாயிலில் உள்ள தூணில் காணப்படும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டில் அரசு தனியாக லிபிகாரரை நியமித்துக் கொண்டதை "ராஜலிபிகார" என்ற சொல்லாட்சி மூலம் அறியலாம் (EI 2:102). தமிழ்க் கல்வெட்டுக்களில் இவர் "எழுத்தன்" என்ற பொருளில் அதாவது

"எழுதுவான்" என்ற தொடர் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஒருவகை மையால் அல்லது செங்காவியால் சுவற்றின் மேல் எழுதப்பட்டு பின்னர் அவை உளியால் செதுக்கப்படாமலே போன நிலையை இந்தியாவில் பாந்தோகர் (Bandokar), கிஞ்சா (Kinja) மலைக் கல்வெட்டு மற்றும் தமிழகத்தில் நார்த்தாமலையில் உள்ள கடம்பவனேசுவரர் கோயிலும், தாராசுரம், அரிட்டாபட்டி, திருநாவலூர் போன்ற இடங்களிலும் உள்ளன. இங்கு இவை கல்வெட்டாகப் பொறிக்கப்படாமல் செங்காவிநிலையிலேயே இன்று வரை உள்ளன. இங்ஙனம் செங்காவி கொண்டு "எழுதுவான்" அல்லது "லிபிகாரர்" எழுதிய பின்னர் சூத்ரதாரர் (Sutradhara) சிலாகூடர் (Silakuta), ரூபகாரர் (Rupakara) என்றழைக்கபடும் கல்வெட்டுச் செதுக்குபவர் அக்கல்வெட்டினை உருவாக்குவர். இங்ஙனம் தமிழ் நாட்டிலும் கல்லில் பொறிப்பதற்கு முன்பாக செய்தியானது அரசரது வாய்மொழியாக ஒருவரால் நேராக செய்தி கேட்கப்பட்டு, பின்பு அச்செய்தி ஓலையில் எழுதப்பட்டுப் பின்பு கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக பூலாங்குறிச்சிக் கல்வெட்டைக் கூறலாம். இக்கல்வெட்டுச் செய்தியைக் செவிமடுத்தவரை "கேட்டார் உலவியப் பெருந்திணை நல்லங் கிழான் இனங்குமான்". என்றும், "கேட்டு வந்து கூறினன் ஓலை எழுதுவான் றமன் காரிகண்ணன்" என்றும், இது கடைப்பி ஓலை "காற்கண்டெழுதிக் கொடுத்தேன் வேணாட்டான் நாரியங்காரி" என்றும் இக்கல்வெட்டில் தெளிவுறக் குறிப்பிடப்பட்டுள்ளது (சுப்பராயலு 1991:57-69). முற்காலத்தில் இத்தகைய கல்வெட்டு எழுதுபவர்கள் பெரும்பாலும் எழுத்தறிவு குறைந்தவர்களாகக் காணப்பட்டதால் சிலநேரங்களில் தவறுகளும் ஏற்படுவதுண்டு. ஆனால் இடைக்காலத்தில் இவர்கள் படிப்பறிவு மிக்கவர்களாக விளங்கினர் என்பது கல்வெட்டுக்களின்கீழ் இவர்கள் பெயர்கள் பொறிப்பதுடன் கையெழுத்திட்டுள்ளதை இன்னாரின் எழுத்து என்ற தொடர்கள் மூலம் உணரலாம். சில இடங்களில் கல்வெட்டின் மொழிநடையை உருவாக்கியவர் (composer), பின்னர் மை கொண்டு எழுதியவர் (scribe) பின்னர் அதன்மேல் உளிகொண்டு செதுக்கியவர் (engraver) என மூவரின் பெயர்களும் கல்வெட்டின் அடியில் காணப்படும் (EI I:42; EI II:21-23, 27-28, 48-49; Buhler 1896:101).

கல்வெட்டுக்களில் பொதுவாக வாக்கியங்களின் இறுதியில் முற்றுப்புள்ளி இடுவதில்லை. ஓலைகளில் எழுதும் பழக்கத்தின் காரணமாக இவ்வழக்கம் தோன்றியிருக்கலாம். மெய்யெழுத்துக்குப் புள்ளி

இயல் 4

# இந்தியக் கல்வெட்டுக்களில் காணும் மொழிகள்

## பிராகிருதக் கல்வெட்டுக்கள்

கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.மு. முதலாம் நூற்றாண்டு வரை தமிழகம் நீங்கலாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டு வந்த மொழி பிராகிருத மொழியாகும். சமஸ்கிருதத்திற்கு நீண்டதொரு பாரம்பரியம் இருந்தாலும் கூட முற்காலக் கல்வெட்டுக்களில் இம்மொழி பயன்படுத்தப்படவில்லை. கி.பி. முதலாம் நூற்றாண்டளவில் சமஸ்கிருதம் கல்வெட்டுக்களில் இடைஇடையே பயன்படுத்தப்பட்டு கி.பி. நான்காம் நூற்றாண்டளவில் பிராகிருதத்தை முற்றிலுமாக ஒதுக்கி விட்டு சமஸ்கிருதம் அனைத்து நிலைகளிலும் கோலோச்சத் தொடங்கியது எனலாம். தென்னிந்தியாவில் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் ப்ராகிருதம் வழக்கொழிந்தது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.மு. முதலாம் நூற்றாண்டு வரை தமிழகம் நீங்கலாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் முழுவதுமாக கோலோச்சிய இம்மொழி மக்கள் மொழியாக விளங்கி வந்துள்ளது. இது சமஸ்கிருதத்தைப் போன்று முழுவதுமாக நெறிப்படுத்தப்பட்ட மொழி எனக் கூறிட இயலாது. மக்களின் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்பட்ட மொழியாக இருந்த காரணத்தால் வட்டாரப் பேச்சுமொழிகள் கல்வெட்டின் ஊடே காணப்படுகின்றன. அசோகர் வெளியிட்ட அரசாணைகளைத் தவிர பிறவற்றில் வட்டாரப் பேச்சுமொழியின் தாக்கத்தை அதிகமாகக் காணலாம். இதன் காரணமாக பிராகிருத மொழிக் கல்வெட்டுக்களில் காணப்படும் சில சொற்களை புரிந்து கொள்வது இயலாது போயிற்று. இப்பிராகிருத மொழியின் தன்மை குறித்து சுருக்கமாக அறிந்து கொள்வது கல்வெட்டாய்விற்கு பலனளிக்கும்.

## பிராகிருத மொழி

இந்தியாவில் சமஸ்கிருத மொழிக்கு ஈடாக பன்னெடுங் காலமாக நின்று நிலவிய மொழி பிராகிருத மொழியாகும். இம்மொழி பொதுவாக வைதீகமதத்தைச் சாராத பௌத்தம் மற்றும் சமண சமயம்

சார்ந்தவர்களால் நன்கு போற்றிப் பாதுகாக்கப்பட்டது. தமி எல்லைக்கு அப்பால் இந்தியாவில் கிடைத்த அனைத்து முந்கா கல்வெட்டுக்களும் பிராகிருத மொழியிலேயே எழுதப்பட்டுள்ள அசோகர் காலத்திற்கு முந்திய பிப்ரவா, மகாஸ்தான் போன்ற கல்வெ டுக்களும், அசோகர் கல்வெட்டுக்களும் பிராகிருத மொழியிலே எழுதப்பட்டுள்ளன. எனவே ஒரு குறிப்பிட்ட காலத்தில் இந்தியாவி பெரும்பான்மையான பகுதியில் முழுமைக்கும் மக்கள் மொழிய பிராகிருதம் விளங்கியது.

பிராகிருத் (பிராகிருதம்) என்றால் பொதுவான அல்ல சாதாரண அல்லது மக்கள் பேச்சு என்று பொருள். பிராகிருத பா என்றால் மக்கள் மொழி என்று பொருள். பிராகிருதம் என்ற எவ்வித செயற்கைத் தன்மையும் அற்ற இயற்கையான மொழி என்ற பொருள் உண்டு. சமஸ்கிருதம் என்றால் செம்மைபடுத்தப்பட் இலக்கிய நடைகொண்ட மொழி என்று பொருள். பொதுவ பிராகிருத மொழி சமஸ்கிருத மொழியிலிருந்து தோன்றியது என் கருதுகின்றனர். ஆனால் இது ஒரு தவறான கருத்து என்பதை டி சர்கார் தெளிவுபடுத்தியுள்ளார். வேதகால மக்கள் தமது சடங் களிலும் இலக்கியங்களிலும் செம்மையான செறிவான மொழி பயன்படுத்தினர். அதேசமயம் இவர்கள் தமது நடைமுறை வாழ்க் யில் பேச்சு மொழியை பயன்படுத்திக்கொண்டனர். இப்பேச்சு மெ காலப்போக்கில் ஏற்பட்ட பொருளாதார, சமூக, தொழில்நுட்ப வளர் களுக்குத் தக்கவாறு தம்மைமாற்றிக் கொண்டும், பிற மொழிகள் காணப்படும் கூறுகளை அல்லது சில சொற்களை உள்வாங் கொண்டும் மக்கள் பேச்சு மொழியாக அல்லது பிராகிருத மொழிய உருவெடுத்துக் கொண்டது. ஆனால் சமஸ்கிருதம் உயர்ந்தோர் மெ யாக சடங்குகளிலும் இலங்கியங்களிலும் மட்டுமே பயன்படுத் மொழியாக உருவாகியது. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் காந்தா தில் வாழ்ந்த இலக்கண ஆசிரியரான பாணினியால் சமஸ்கி மொழி செம்மைப்படுத்தப்பட்டு நெறிப்படுத்தப்பட்டது. எனவே கி ஐந்தாம் நூற்றாண்டு முதல் சமஸ்கிருதம் ஒரு இலக்கண வ யறைக்குள் தொடர்ந்து கையாளப்பட்டது.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த புத்தரும், மஹாவீர தாம் உருவாக்கிய புதிய சமயத்தின் கொள்கைகளைப் பிராகி மொழியிலேயே மக்களுக்கு போதித்தனர். இம்மொழி அரசு மெ யாகவும் அரசவைகளில் பயன்படுத்தப்பட்டது. மக்கள் மொழிய

# இயல் 5

# கல்வெட்டுக்களின் தன்மை

இந்தியாவில் கிடைத்த ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்களில் பெரும்பான்மையானவை சமயச் சார்புடையனவாகவும், மன்னனின் புகழ் பாடுபவையாகவும், கொடைக் கல்வெட்டுக்களாகவும் இருந்த போதிலும் இவற்றின் ஊடாக வருகின்ற சமூக வரலாற்றுச் செய்திகளை வைத்துக் கொண்டு கல்வெட்டின் காலம், தன்மை மற்றும் வரலாறு போன்றவற்றைக் கல்வெட்டியலார் கணித்துள்ளனர். மன்னனின் புகழ்பாடுபவையாகக் காணப்படும் கல்வெட்டுக்களில் மெய்க்கீர்த்தி என்று சொல்லப்படுகின்ற கல்வெட்டின் முற்பகுதி வேண்டுமானால் சில நேரங்களில் மிகைபடுத்திக் கூறப்பட்டிருக்கலாம். இருப்பினும் அவற்றை பிற தரவுகளுடன் ஒப்பிட்டு வரலாற்றை எழுத இயலும். மேலும் கல்வெட்டின் பிற்பகுதி அக்கால சமூக அமைப்பை ஓரளவு வெளிப்படுத்துபவையாகவே அமைகின்றன. ஒவ்வொரு காலக்கட்டத்திலும் கல்வெட்டுக்கள் பொதுவாக ஒரு சமயக் கருத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன.

அசோகர் கல்வெட்டுக்கள் அனைத்தும் மக்களுக்கு அறிவுரை கூறி நல்வழிப்படுத்துகின்ற கல்வெட்டுக்களாகும். இத்தகைய நன்னெறிக் கல்வெட்டுக்கள் அசோகருக்குப் பின்பு பெரும்பாலும் கிடைக்கவில்லை. அதேபோன்று பஞ்சத்தை தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய முறைகளை எடுத்து இயம்புகின்ற சொகவுரா (Sohgaura) (Sircar 1965:82), மகாஸ்தான் (Mahasthan) (Sircar 1965:79) (படம் 5.1) போன்ற கல்வெட்டுக்கள் பிற்காலத்தில் கிடைக்கவில்லை. இவ்விரு கல்வெட்டுக்களும் முழுக்க முழுக்க ஆட்சிமுறையை விளக்குகின்ற நிருவாகக் கல்வெட்டுக்கள் எனலாம். அதேபோன்று ஒவ்வொரு ஆண்டிலும் நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகளை எடுத்தியம்புகின்ற கலிங்கமன்னன் காரவேலனின் ஹாதிகும்பா (Hathigumpha) கல்வெட்டு (பார்க்க படம் 4.2) போன்றவை பிற்காலத்தில் கிடைக்கவில்லை (*EI* XX:71-89). எனவே அசோகர் காலம் தொட்டு குப்தர் காலம் வரை கிடைக்கின்ற கல்வெட்டுக்கள் பெரும்பாலும் அரசனின் புகழ்பாடாமல் சமூக நிகழ்வுகளை தெரியப்படுத்துவனவாக உள்ளன. குப்தர் காலம் தொட்டுக் கிடைக்கின்ற பெரும்பான்மையான



5.1 மகாஸ்தான் கல்வெட்டு

கல்வெட்டுக்களில் மன்னன் கொடையளித்த காலத்து அல்லது வெற்றி கொண்ட நிகழ்வினை குறிக்கின்றவகையில் நடைபெறுகின்ற விழாவின்போது அல்லது கோயில் கட்டுதல் போன்ற இறைபணிச் செயல்களை தெரிவிக்க வருகின்ற பொழுது அம்மன்னனின் புகழ் பாடுகின்றவையாகவே இருக்கின்றன. எடுத்துக்காட்டாக சமுத்திரகுப்தனின் வெற்றியைப் பறைசாற்றுவனவாக அவனது அலகாபாத் தூண் கல்வெட்டு அமைகிறது (பார்க்க படம் 2.5). இதே போன்ற தன்மையைக் கொண்டதுதான் யசோதர்மனின் மாண்ட்சோர் தூண் கல்வெட்டும் ஆகும். சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியின் அய்யவொளெ கல்வெட்டு அம்மன்னன் சமணக் கோயில் எடுப்பித்ததை திறம்படக் கூறுகிறது. மேலைசத்ரப மன்னன் ருத்ரதாமனின் ஜுனாகாட் கல்வெட்டும், கர்நாடக மாநிலத்தில் கிடைத்த சாந்திவர்மனின் தாளகுண்டா கல்வெட்டும் நீர்ப்பாசனப் பணிகள் மேற்கொண்டமையைத் தெரிவிக்கின்றன. மன்னனின் புகழ்பாடும் சிறப்பு வாய்ந்த கல்வெட்டுக்கள் பெரும்பாலும் அம் மன்னனின் அரசவைக் கவிகளால் தொகுக்கப்பட்டதாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக சமுத்திரகுப்தனின் அரசவைக் கவியான ஹரிசேனன் இயற்றிய அலகாபாத் தூண் கல்வெட்டையும், இரண்டாம் புலிகேசியின் அரசவைக் கவியான ரவிகீர்த்தி இயற்றிய அய்யவொளெ கல்வெட்டையும் குறிப்பிடலாம் (பார்க்க படம் 2.6). துவக்க கால கல்வெட்டுக்கள் ஸ்வஸ்திஸ்ரீ போன்ற ஓரிரு மங்கலச்சொல்லுடன் ஆரம்பிக்கும்

## இயல் 6

# அசோகர் கல்வெட்டுக்கள்

இந்தியாவில் கிடைத்த கல்வெட்டுக்கள் அக்காலக் கட்டத்தில் நிகழ்ந்த (அரசியல், சமயம், சமூகம், பொருளாதாரம்) போன்றவற்றை வெளிப்படுத்திய போதிலும் அவை அரசியல், சமயம் என்ற இரு காரணிகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்கள் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் செயல்பாடுகளை எடுத்தியம்ப வில்லை என்ற போதிலும் இக்கல்வெட்டுக்களில் கிடைக்கும் செய்தி களைப் பிற முதன்மைச் சான்றுகளுடன் ஒப்பிட்டு நோக்கி ஒரு முழுமையான சமூகத்தை வெளிக்கொணர கல்வெட்டுக்கள் உதவி புரிகின்றன. இக்கல்வெட்டுக்கள் வெளிப்படுத்தும் செய்திகளில் காலந்தோறும் உள்ள பொதுத்தன்மை குறித்து அறிந்து கொள்வது பயனுடையதாக இருக்கும்.


## மௌரியர் காலக் கல்வெட்டுக்கள்

(கி,மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 2ஆம் நூற்றாண்டு வரை)

### அசோகர் கல்வெட்டுக்கள்

மௌரியப் பேரரசரும், புத்த சமயத்தைப் போற்றி வளர்த்த வருமான அசோகரின் கல்வெட்டுக்களே தமிழகத்தைத் தவிர்த்த பிற இந்தியப்பகுதியில் கிடைத்த முதல் கல்வெட்டுக்கள் எனலாம். பிற்காலத்திய கல்வெட்டுக்களைப்போல அல்லாமல் பல்வேறு நிலை களில் இக்கல்வெட்டுக்கள் மாறுபட்டவையாகக் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுக்கள் கி.மு. 272-232க்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்தவை. மேலும் மன்னரே நேரடியாக மக்களுக்கு நன்னெறிகளை எடுத்து இயம்புவனவாக இக் கல்வெட்டுக்கள் திகழ்கின்றன. இரண் டாவது ஒரே மாதிரியான கல்வெட்டுக்கள் தமிழகம் நீங்கலாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் பொறிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இக் கல்வெட்டுக்கள் பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு மகதப் பேரரசை ஆட்சிப் புரிந்ததால் அசோகரின் கல்வெட் டுக்களில் கிழக்கு வட்டார மொழியின் தாக்கம் பெரும்பாலும் காணப் படுகிறது. இதைக் கருத்தில் கொண்டே சில அறிஞர்கள் இதை "அசோகன் பிராகிருதம்" என்றழைத்துள்ளனர். இவ்வட்டார மொழி

மகத நாட்டில் திகழ்ந்தமையால் "மகதி" என்றும் அழைக்கப்பட்ட இது அரச மொழியாக இருந்ததால் அசோகரின் கல்வெட்டுக்கள் இவை பெரும்பாலும் இடம் பிடித்தன. இருப்பினும் குஜராத் மாநி தில் கிர்னூர் என்ற இடத்தில் கிடைத்த சிதைந்த கல்வெட்டி மேற்கு வட்டார மொழியின் தாக்கமும், காந்தாரப் பகுதியில் ஷாப கார்கி (Shahbazgarhi) மற்றும் மான்சேர (Mansehra) என்ற இடத்தி கிடைத்த கல்வெட்டில் அப்பகுதி வட்டார மொழியான காந்தா மொழியின் தாக்கமும் காணப்படுகிறது. சிலவற்றைத் தவிர பெரு பான்மையானவற்றில் கிழக்கு வட்டார மொழியின் தாக்கமே காண படுகிறது. இக்கல்வெட்டுக்கள் அசோகரின் 8ஆம் ஆட்சியாண்டு முதல் (Rock Edict XIII) 27 ஆம் ஆட்சியாண்டு வரை (Delhi-Topra Pillar Edict VII) கிடைத்துள்ளன. இவை கி.மு.264-245ஆம் ஆண்டி குள் அடங்கும். அசோகனின் பாறைக் கல்வெட்டுக்கள் இரண்டில் (Major Rock Edict II, XIII) கிரேக்க மன்னன் ஆண்டியோகஸின் பெயர் குறிப்பிடப்படுவதால் இக்கல்வெட்டுக்களை எளிதில் காலக் கணிப்பு செய்ய முடிந்தது.



**6.1 அசோகன் கல்வெட்டு**

அசோகருடைய அனைத்துக் கல்வெட்டுக்களிலும் இவர் பெயர் தேவநாம் பிய பியதசி எனக் குறிப்பிடப்பட்டிருந்ததால் முதலில் இவரை அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டது (படம் 6.1). ஆனால் கர்நாடக மாநிலத்தில் உள்ள மஸ்கி என்ற இடத்தில் கிடைத்த சிறுபாறைக் கல்வெட்டு ஆணையில் இவர் பெயர் "தேவநாம்


# தமிழகக் கல்வெட்டுக்களின் பொதுத்தன்மை

தமிழக வரலாற்று மீட்டுருவாக்கத்திற்கு உதவிடும் முதன்மைச் சான்றுகளில் ஒன்றான கல்வெட்டுக்கள் தமிழகத்தில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே காணக் கிடைக்கின்றன. சுமார் இரண்டாயிரத்தி நானூறு ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக பாறைகளிலும், தூண்களிலும், கற்குகைகளிலும், கற்படுக்கைகளிலும், கோயிற் சுவர்களிலும், கற்சிலைகளிலும், பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டுக்கள் அனைத்தும் ஒரே தன்மையினதாக இல்லை. சமகால சமூகத்தின் வெளிப்பாடாக இவை விளங்குவதால் அச்சமூகத்தின் தன்மைக்கு ஏற்றவாறு இவற்றின் தன்மை உயர்ந்தும் தாழ்ந்தும் விளங்குகின்றன. ஆதலால் அவற்றின் வரிவடிவத்திலும் மொழியமைப்பிலும், மொழிநடையிலும், வெளிப்படுத்தும் கருத்துக்களிலும் காலந்தோறும் வேறுபாடுகளைக் காணமுடிகின்றன. கல்வெட்டுக்களிடையே காணப்படும் இத்தகைய வேறுபாடுகளை அறுதியிட்டு ஒரு காலநிலைக்குள் வைக்க இயலாது என்றாலும் கல்வெட்டின் அமைப்பு, மொழியமைப்பு, வரிவடிவம் போன்றவற்றிடையே காணும் பொதுத்தன்மை அடிப்படையில் ஒரு பரந்துபட்ட கால எல்லைக்குள் இவற்றை வைக்கலாம். அந்த வகையில் தமிழகத்தில் காணப்படுகின்ற கல்வெட்டுக்களின் பரந்துபட்ட பொதுத்தன்மை இங்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

**முற்காலக் கல்வெட்டுக்கள் (கி.மு. 4ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரை)**

தமிழகத்தில் கிடைத்த மிகத் தொன்மையான கல்வெட்டுக்கள் தமிழ்-பிராமி வரிவடிவத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் ஆகும். இக்கல்வெட்டுக்கள் இயற்கையாக அமைந்த குகைத்தளங்களின் முகப்புகளிலும், இயற்கைத் தளங்களிலும், செம்மைபடுத்தப்பட்ட கற்படுக்கைகளிலும், நெடுநிலை நடுகல்லிலும் (menhir), நடுகல்லிலும் (herostones) காணக்கிடைக்கின்றன. அண்மையில் கிடைத்த தமிழ் பிராமி நடுகல்லையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் இத்தகைய தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்பு பெற்ற 94 கல்வெட்டுக்கள் 32 இடங்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (Mahadevan 2003 : 314-447). இக்கல்வெட்டுக்கள் பெரும்பாலும் சமணத் துறவிகளுக்காக

அளித்த கொடைகளைக் குறிப்பனவாகும். தமிழகத்தில் இதுவரை கிடைத்த கல்வெட்டுக்கள் அனைத்தும் சமணத்தோடு தொடர்புடைய தாக இருப்பதால் தமிழகத்தில் கல்வெட்டுக்களை அறிமுகப்படுத்தி எழுத்தறிவையும் புகுத்தியவர்கள் சமணர்கள் என்ற கருத்து நிலவியது. இக்கல்வெட்டுக்களில் காலத்தால் முந்தியதாக மாங்குளம் கல்வெட்டு கருதப்பட்டு வந்தது (பார்க்க படம் 4.5). ஆனால் தேனிமாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டத்தில் வைகை ஆற்றங்கரையில் அமைந்துள்ள புலிமான்கோம்பை என்ற இடத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று நடுகற்கள் தமிழக வரலாறு தொடர்பாகவும், எழுத்தறிவு தொடர்பாகவும் கொண்டிருந்த பல்வேறு அறிஞர்களின் கருத்தை மாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளன (படம் 7.1) (ராஜன் 2006:1-5). முதன் முதலாக சமயம் சாராத கல்வெட்டுக்களாக இவை அமைவ துடன் சங்க இலக்கியங்களில் காணப்படும் நடுகற்கள் தொடர்பான செய்திகளுக்கு வலுச்சேர்ப்பனவாகவும் உள்ளன. இந்நடுகற்களில் காணப்படும் தமிழ்-பிராமி எழுத்துப் பொறிப்புக்கள் மாங்குளம் கல்வெட்டுக்களின் காலத்தை விட முந்தியதாகக் கருதப்படுவதால் தமிழகத்தில் கிடைத்த கல்வெட்டுக்களில் காலத்தால் முந்திய கல்வெட் டுக்களாக இவை தற்பொழுது கருதப்படுகின்றன. புலிமான் கோம்பை யில் கிடைத்த நடுகல்லைப் போன்று அண்மையில் தாதப்பட்டி என்ற சிற்றூரிலும் நெடுநிலை நடுகல்லில் இத்தகைய தமிழ் பிராமி பொறிப்பு பெற்ற கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இத்தகைய நடுகற்



**7.1 புலிமான் கோம்பை நடுகல் கல்வெட்டு**